10.04.2026

OS No: 316/2019

பி.வா.சா. 2 திரு. வெள்ளைக்கண்ணு

1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது

<u>**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

______ நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கூலி வேலை பார்க்கிறேன். நிரூபண வாக்குமூல விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் தாவா வழக்கினை எத்தனை இலக்கங்களுக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அசனம்மாள் , ரசியா பேகம் ஆகியோர்களை நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அசனம்மாள் , ரசியா பேகம் ஆகியோர் சிங்கம்புணரியில் வசித்தார்கள் என்றால் சரிதான். அசனம்மாள் , ரசியா பேகம் ஆகியோர் தற்போது உயிரோடு இல்லை என்றால் சரிதான். அசனம்மாள் , ரசியா பேகம் ஆகியோர்களுக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்றால் அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் பாத்தியம். அசனம்மாள் , ரசியா பேகம் ஆகிய இருவரும் கிரைய பத்திரமாக தாவா சொத்தினை 2 ஆம் பிரதிவாதி கொடுத்தாரா என்றால் இல்லை வெள்ளிலையாக தான் கொடுத்தார். மேற்படி வெள்ளிலை பத்திரத்தினை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் இருந்து தான் அதனை வாங்கி

கொடுத்தேன். எவ்வளவு ரூபாய்க்கு என்ன தேதியில் தாவா சொத்தினை வெள்ளிலை பத்திரம் மூலமாக நான் 2 ஆவது பிரதிவாதிக்கு வாங்கி கொடுத்தேன் என்றால் நான் படிக்காத நபர் ஆவேன் அதனால் அதனை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையத்திற்கு எவ்வளவு ரூபாயை 2 ஆம் பிரதிவாதி ரொக்கமாக கொடுத்தார் என்றால் தெரியாது. நாச்சம்மாள் குடும்பத்தினை பற்றி எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 30 வருடங்களாக தெரியும். நாச்சம்மாள் கணவர் பெயர் அவையன் என்றால் சரிதான். அவையன் , நாச்சம்மாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் கண்ணன் , சின்னச்சாமி என இரண்டு ஆண்பிள்ளைகள் உண்டு அதில் கண்ணன்

இறந்து விட்டார். அவையன், நாச்சம்மாளுக்கு கண்ணன், சின்னச்சாமியை தவிர அவையன் என்ற பெயரில் மகன் உள்ளாரா என்றால் இல்லை. இறந்து போன கண்ணனுக்கு மனைவி மற்றும் பிள்ளைகள் உள்ளனரா என்றால் உள்ளனர். கண்ணன் மனைவி மற்றும் பிள்ளைகள் எந்த ஊரில் வசிக்கிறார்கள் என்றால் தேத்திப்பட்டியில் வசிக்கிறார்கள். நான் 2 ஆம் பிரதிவாதிக்கு தாவா சொத்தினை கிரையம் வாங்கி கொடுத்தாக சொல்வதில் மேற்படி சொத்திற்கான சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கி கொடுத்த சமயத்தில் தாவா சொத்து காலி மனையாக இருந்தது என்றால் விவசாய நிலமாக இருந்தது. 2 ஆம் பிரதிவாதிக்கு நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கி கொடுத்த பத்திரத்தில் அசனம்மாள் , ரசியா பேகம் ஆகியோர் கையெழுத்து அல்லது கைரேகை செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. 2 ஆம் பிரதிவாதிக்கான கிரைய வெள்ளிலை பத்திரத்தில் எத்தனை பேர் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் தெரியாது. வென்னிலை பத்திரம் எழுதப்பட்டிருந்ததா அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருந்ததா என்றால் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. மேற்படி வென்னிலை பத்திரத்தில் யார் தட்டச்சு செய்து கொடுத்தார்கள் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நாச்சம்மாள் தாவா சொத்து அமைந்துள்ள இடத்தில் இருந்து 3 கி.மீ தள்ளி உள்ள ஊரில் வசிக்கிறார் என்றால் சரியல்ல அரை பர்லாங்கு தொலைவில் உள்ள தேத்திப்பட்டி கிராமத்தில் வசிக்கிறார். தேத்திப்பட்டி கிராமத்தில் நாச்சம்மாளுக்கு சொந்தமாக வீடு உள்ளதா என்றால் வீடு இருந்தது இடிந்து விட்டது தற்போது தாவா சொத்து தோப்பில் தான் வசித்து வருகிறார். தாவா சொத்தான தோப்பில் மின்சார வசதி உள்ளதா என்றால் உள்ளது போர் போட்டுள்ளார்கள். தாவா சொத்து தோப்பில் என்ன பயிரிட்டுள்ளார்கள் என்றால் சுமார் 1500 தென்னை மரங்கள் உள்ளது. 1500 தென்னை மரங்களுக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 20 வருட வயது இருக்கும். மேற்படி தென்னை மரங்கள் மாதத்திற்கு ஒரு முறை காய் காய்க்குமா அல்லது 1 ½ மாதத்திற்கு ஒருமுறை காய் காய்க்குமா என்றால் 1 ½ மாதத்திலும் 2 மாதத்திலும் காய் வெட்டுவார்கள். இறந்து போன கண்ணன் மனைவிக்கு தேத்துப்பட்டியில் விவசாய நிலம் உள்ளதா என்றால்

தாவாசொத்தான தோப்பு தான் அவர்களுடைய இடமாகும். தாவா சொத்து தோப்பில் வரப்பு மூலமாக பிரிக்கப்பட்டு நில அமைப்பு உள்ளதா என்றால் இல்லை மொத்தமாக தான் மேற்படி இடம் உள்ளது. மேற்படி தாவா சொத்து தோப்பில் இறந்து போன கண்ணன் மனைவியும் உள்ளார் 2 ஆம் பிரதிவாதியும் உள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் கிழக்கு புறம் ஓட்டு வீடு உள்ளதா என்றால் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு போட்ட வீடு ஒன்று உள்ளது அதில் இறந்து போன கண்ணன் மனைவி வசிக்கிறார் ஓட்டு வீடு ஒன்று உள்ளது அதில் 2 ஆம் பிரதிவாதி நாச்சமாள் வசிக்கிறார். தாவா சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அவையன் பெயரில் பட்டா மாற்றியதாக சொன்னார்கள் . அவையன் என்பவரின் மனைவி சந்திரலேகாவா என்றால் சரியல்ல அவையன் மனைவி 2 ஆம் பிரதிவாதி நாச்சம்மாள் ஆவார். தாவா சொத்து ரோட்டிற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் தென்புறமாக உள்ளது. தாவா சொத்தினை நான் பார்க்கவில்லை என்றும் 2 ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.10 16:22:15 +0530